<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு)</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>.
<u>**O.S**.No. 91 /2023</u>

2025-ம் ஆண்டு செம்டம்பர் மாதம் 24-ம் நாள் வாதியின் சாட்சிய வாக்குமூலம். 1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திருமதி.தமிழ்செல்வி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு , அசன் சிக்கந்தர் அலி | ஜாதி | : |
| த.பெ / க.பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

24.09.2025

P.W.2

**<u>முதல் விசாரணை</u>**

நான் வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வச்சக்காரப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.172/2022 வழக்கின் விபத்து பதிவேட்டு நகல் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.10 ஆகும். இந்த வழக்கின் எனக்கு மருத்துவர் இறுதி கருத்துரை வழங்கியுள்ளார். அதன் நகல் வா.சா.ஆ.11 ஆகும். மருத்துவரின் இறுதி கருத்துரையில் இறந்து போன நபர் மின்சார தாக்கி அதன்விளைவாக இறந்துவிட்டார் என்று அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் குற்றப்பத்தரிக்கை நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.12 ஆகும். மேற்படி குற்றப்பத்திரிக்கை நகலில் 1ம் பிரதிவாதி தனது தோட்டத்தில் G.I வயர்களை தோட்டம் முழுவதும் கட்டி வைத்து அதில் மின்சாரத்தை பாய்ச்சி இருந்து, அதை தொட்டதால் முனியசாமி என்பவர் இறந்ததாக 1ம் பிரதிவாதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

<u>**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

முனியசாமி இறந்தது மின்சார வாரியத்திற்கு சொந்தமான பிரதான வயர் செல்லும் பாதையில் அடிபட்டு இறந்ததாக குற்றச்சாட்டு இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களை சுற்றி மின்சார பாயக்கூடிய இந்த வயர்களை சுற்றி வைத்து அது அருந்து அதில் இறந்த நபர் தொட்டதால் மின்சாரம் பாய்ந்து இறந்துள்ளார் என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்த நபர் உதவி மின்பொறியாளர் என்றால் சரிதான். இந்த விபத்து 1ம் பிரதிவாதி அனுமதியில்லாமல் ஜி.ஐ கம்பியை தென்னை மரத்தில் சுற்றியிருந்ததால், அதில் மின்சாரம் பாய்ந்து முனியசாமி இறந்தார் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பு கிடையாது என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை.**

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.